**MCOP NO:168/2023 DATE: 07.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு.பிரவீன்ராஜ்

த/பெ : திரு.ராஜேந்திரன்

வயது : 32

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 07.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**<u>மசா1 மீண்டும் வரவழைக்கபட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து 11.10.2022 ல் நடந்தது. விபத்து குறித்து புகார் விபத்து நடந்து 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன். ஆனால் 20.10.2022 ல் தான்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் மருத்துவமனையில் இருந்த போதே போலீசார் என்னை விசாரித்தார்கள். புகார் பதிவு செய்யவில்லை என்பதால் மனித உரிமை ஆணையத்தில் தகவல் தெரிவித்து அதன் பின்னர் புகார் பதிவு செய்யப்பட்டது. மனித உரிமை ஆணையத்தில் கொடுக்கப்பட்ட புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என் கை வசம் உள்ளது. என் தந்தை கொடுத்த புகாரில் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் இடித்த வாகனத்தின் விவரங்கள் தெரியவில்லை என்பதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து நடந்த மறுநாள் விபத்து நடந்த இடத்தில் இருந்த சிசிடிவியை பார்த்து என் மீது மோதிய ஆட்டோவை கண்டுபிடித்தேன். மனுவில் சொல்லப்பட்டுள்ள வாகனத்திற்கும், முதல் தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகனம் என்று சொல்லப்பட்டுள்ளதால் மனுவில் சொல்லப்பட்ட வாகனமானது விபத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விபத்து ஏற்படுத்திய வாகனம் ஏதோ ஒரு வாகனம் என்றும், அதை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால் இழப்பீடு பெறுவதற்காக 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை தவறாக காட்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும், என்னுடைய விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் நான் சொல்லும் ஆட்டோவின் விவரங்கள் குறிப்பிடபடவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. விபத்து ஏற்பட்ட தேதியிலிருந்து 3 நாட்கள் நான் உள்நோயாளியாக சிகிச்சை

பெற்றேன். அதற்கு பின்னிட்டு விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். நான் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு ஆதரவாக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். விபத்திற்கு பின்னிட்டு வெளிநோயாளியாக தனியார் மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன். விபத்து தேதியன்று நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட தினத்தன்று எனக்கு எதிரே வந்த வாகனத்தை பொறுத்து எனக்கு நியாபகம் உள்ளதா என்றால் வந்த வாகனம் ஆட்டோவாகும், மற்ற விவரங்கள் எனக்கு தெரியவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும், என்னுடைய விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து தேதியில் நான் வாகனத்தை ஓட்டி சென்ற எதிர்திசையில் தான் என் மீது மோதிய வாகனம் வந்தது. திசை என்னால் சொல்ல இயலாது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.